முருகப்பெருமான் துணை

**மகான் கழறிற்றறிவார் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானிகள் பூசை செய்து
வானவர் மெச்ச தானம் அருளி
வையகம் காத்திடும் தேசிகா வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி இனிதே
வழங்குவேன் அருளாசி தன்னை
தாழ்விலா சுபகிருது மிதுன திங்கள்
தாமுரைக்க இருபானாற் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 26 நாள், 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் கழறிற்றறிவார் நாயனாரும்
வையகம் வளம்பெற உரைப்பேன்
சோரமின்றி நல் சமூகம் அமைய
சுத்தநெறி காட்டும் அரங்கஞானி வழியை
4. வழியை மக்கள்கள் ஏற்று
வணங்கி பின்பற்றித் தொடர
அழியாமை என்கின்ற மேல்நிலை
அகிலத்தார் அடைந்து உயர்வர்
5. உயர்வான சூழல்கள் எங்கும் பரவ
உலகமே இயற்கை பலமோடு
தயவான மக்கள் மனபலத்தால்
தலைமைக்கு ஞானவான்கள் தேர்வாகி
6. ஆகியே ஞானவான்கள் தலைமை
அகிலமெங்கிலும் உண்டாகி இனிதே
அகிலம் நல்ல பாதுகாப்பை பெறும்
அறம் தருமம் எங்கும் நிரம்பி
7. நிரம்பியே மழைவளம் குன்றா
நிலவுலகம் பசுமை கழனி கிருஷியென
வரம்பிலா வளர்ச்சி கண்டு
வையகம் நிறைவு காண்கும்
8. காண்கவே அரங்க மகானின்
கலியுக மீட்புக்கான மார்க்கம்
ஆன்மீக ஞான வழிகளாகும்
அறம் கலந்த சன்மார்க்கமாகும்
9. ஆகவே முருகா அரங்கா என
அனைவரும் செபதபம் கூறி
வகையான பிரணவக் குடிலை
வணங்கி வந்து அனுகி

10. அனுகியே சேவையில் இணைந்து
அன்னதான மார்க்கம் வழியில்
தானாகப் பொருளுதவி செய்து
தன்னார்வத் தொண்டர்களாகி
11. ஆகியே அரங்கன் தலைமையில்
ஆன்மீக ஞான ஆட்சிதனை
அகிலத்தார் இணைய மாற்றம்
ஆறுமுகனாரால் கண்டு தேறும்
அருளாசி முற்றே

–சுபம்–